ஃபெஞ்சில் புயலில் சிக்கி, அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதியான, விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் ஊராட்சி ஒன்றியம், இருவேல்பட்டு, அரசூர், ஆலங்குப்பம் ஆகிய ஊராட்சிகளில், விவசாய நிலங்கள், சாலைகளில் மண் அரிப்பு, மழைநீர் புகுந்த வீடுகள் ஆகிய பகுதிகளுக்குச் சென்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மக்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், த.உதயசூரியன், ஏ.கே.மணிக்கண்ணன், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள், ஊராட்சி பொதுமக்கள் ஆகியோர் பலர் இருந்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (05.12.2024) திருச்சி மாவட்டம், திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.11.30 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ள நெற்களஞ்சியத்தினை திறந்து வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை ! சி.மகேஷ்குமார் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் 10 கருணை இல்லங்களுக்கு நல உதவிகள்!

அமைச்சர் பி.கீதா ஜீவன் வழங்குகிறார்!

சென்னை, டிச. 6 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்13, இல்லார்க்கு நாமே உறவு! எல்லோர்க்கும் உதயமே வரவு! எனும் தலைப்பில் 10 கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (7.12.2024 சனிக்கிழமை) காலை 10 மணியளவில், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பட்டுமேடு நாடார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ்குமார் தலைமை வகிக்கிறார். மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், டி.லோகேஷ், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, M.D.தமிசெல்வன், செ.முருகன், எஸ்.என்.சௌந்தர்ராஜன், எஸ்.என்.பவுல்ராஜ், எஸ்.என்.ராமச்சந்திரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் சமூக நலம் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் 10 கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், மேயர் ஆர். பிரியா ராஜன், டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி, வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா.விடுதலை, கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex.MLA, பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன்பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, வே.வாசு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர்.

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.விநோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில்வி ஜய், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஹரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், இரா.வீரமணி. கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவுத்பீ எம்.சி, கே.சாரதா எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி. கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைதுரை, பி.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.ரவி, கே.பி.ஆதவன் மணி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள்: எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் நன்றி கூறுகிறார்.

பட்டினப்பாக்கத்தில் கட்டிட விபத்தில் உயிரிழந்த

சையத் குலாப் குடும்பத்திற்கு அரசு ரூ.5 லட்சம் நிதி!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, டிச. 6-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

சென்னைபட்டினப்பாக்கம் - சீனிவாசபுரம் திட்டப் பகுதியில் 04.12.2024 இரவு ஏற்பட்ட கட்டட விபத்தில் இயற்கை எய்திய சையத் குலாப் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிவாரண நிதி வழங்கப்படுகிறது என குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் திட்டப்பகுதியில் 1965-1977 ஆண்டு வரை 6.20 ஹெக்டேர் பரப்பளவில் 1356 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த 60 ஆண்டு நீண்ட கால பயன்பாட்டாலும் தட்பவெட்ப மாறுப்பாட்டாலும் கட்டடம் சிதலமடைந்த நிலையில் இருந்தது. தொழில் நுட்ப வல்லுநர் குழுக்களை கொண்டு ஆய்வு செய்ததில் இக்கட்டடங்களை அகற்றிவிட்டு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில் 20.01.2022 மற்றும் 09.03.2022 ஆகிய நாட்களில் குடியிருப்புகளை காலி செய்ய வாரியத்தால் அறிவிப்பாணைகள் வழங்கப்பட்டது. மேலும், 08.07.2022 அன்று மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமையிலும் 18.09.2022 அன்று தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தலைமையிலும் 09.09.2024 வாரிய கண்காணிப்பு பொறியாளர் தலைமையிலும் மற்றும் 23.09.2024, 06.11.2024 மற்றும் 11.11.2024 ஆகிய நாட்களில் வாரிய நிர்வாகப் பொறியாளர் தலைமையில் பொதுமக்கள் மற்றும் கிராம மீனவர் சபையினருடன் பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்றது. இந்த கூட்டங்களில் குடியிருப்பை காலி செய்வதில் சுமூக தீர்வு எட்டப்படவில்லை.

இந்நிலையில் நேற்று (04.12.2024) இரவு 134வது பிளாக் மூன்றாம் தளத்தில் ஜன்னலின் சன்ஷேட் இடிந்து விழுந்ததில் சையத் குலாப்புக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார். அன்னாரது குடும்பத்திற்கு அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு ரூ.5.00 இலட்சம் நிவாரண நிதியாக வாரியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பு அளித்து சிதலமடைந்த குடியிருப்புகளை காலி செய்து தரும் பட்சத்தில் பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு வாரியத்தால் புதிய குடியிருப்புகள் கட்டி குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும். இடைப்பட்ட காலத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.24,000/ கருணைத் தொகையாக வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவித்துள்ளார்.

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின்கீழ்

ரூ. 153 கோடியில் கல்லூரிகள் - தொழில்நுட்ப கல்லூரிகளை மேம்படுத்த நடவடிக்கை!

அமைச்சர் கோவி.செழியன் தகவல்!

சென்னை,டிச.6-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் உயர்கல்வித் துறைக்கென்று பல்வேறு திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 2022ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு ரூ.1000 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2022-2023 மற்றும் 2023-2024ஆம் ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டிற்கு 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 12 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 6 அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.152,96,83,000/- நிதி ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, கோவை, திருப்பூர், தர்மபுரி, நீலகிரி, சேலம், அரியலூர், முசிறி, செங்கல்பட்டு, கடலூர் (பெரியார் கலைக்கல்லூரி, திருகொளஞ்சியப்பர் கலைக்கல்லூரி), விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, வேலூர் ஆகிய பகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரிகளிலும், கோவை தொண்டாமுத்தூர், நீலகிரி, கூடலூர், குமாரபாளையம், வேடசந்தூர், வீரபாண்டி, கடலாடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி, நாகர்கோவில், புதுக்கோட்டை, திருச்சி தந்தை பெரியார் கலை அறிவியல் கல்லூரி, வேலூர் மற்றும் விழுப்புரத்தில் உள்ள புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிகளிலும், சேலம், கொடைக்கானல், சிவகங்கை, கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகளிலும் என 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.5281.83 இலட்சம் நிதி தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு அரசு தொழில்நுட்ப கல்லூரி, கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், வேலூர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா, ஊத்தங்கரை அப்பிநாயக்கன்பட்டி, அரியலூரில் உள்ள கீழப்பழூர் அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரி, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக் கோட்டை, கோயம்புத்தூர், மதுரை மாவட்டம் மதுரை, உசிலம்பட்டி, திருமங்கலம், சென்னைகுரோம்பேட்டை, தரமணி ஆகிய பகுதிகளில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், திருச்சிரா ப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நீலகிரி மாவட்ட பா.ஜ.க சிந்தனையாளர் அணி தலைவர் வழக்கறிஞர் கருணாநிதி மாவட்ட கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட தி.மு.க., செயலாளர் பா.மு.முபாரக் தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். மாவட்ட திமுக செயலாளர் இவரை கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வரவேற்றார். உடன் மாவட்ட துணை செயலாளர் ஜே.ரவிகுமார், மாவட்ட பொருளாளர் ஏ.நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. திராவிடமணி, எஸ்.காசிலிங்கம், நெல்லியாளம் நகர செயலாளர் மு.சேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அமிர்தலிங்கம், எம். சதக்கத்துல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ந.சிவசுப்ரமணியம், நெல்லியாளம் நகர கழக நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் சேகர், யுகேஷ், முகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

துணை முதல்வர் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ. அன்பரசன் – எஸ்.ஆர். ராஜா –எஸ். புகழேந்தி பங்கேற்பு!

தாம்பரம்,டிச.6-

தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் நாள் 7.12.2024 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் வால்மீகி தெரு கிழக்கு தாம்பரத்தில் பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் தத்துவ கொள்கை வீரன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா எனது எஸ்.இந்திரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்திற்கு வி.முனுசாமி பகுதி கழக அவைத்தலைவர் அவர்களின் வரவேற்புரையிலும் வே.இராசேந்திரன் பி.ஜோதி குமார்,எம்.சீனிவாச குமார்,கி.வேலுமணி. எல்.பேகம் டி.ஆர்.நரசிம்மன் ஏ.நசீர் அ.லோகேஷ் குமார் விஜி சிவ குமார் சி.இளஞ்செழியன் கே.ரமேஷ்பாபு வ.லோகநாதன் டிவி கே.முருகன் கு. பிரபாகரன் ஆகியோர்கள் முன்னிலையிலும் கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி எக்ஸ் எம் எல் ஏ அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார் இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர் பாலு பி எஸ் சி எம் பி மாண்புமிகு சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம் எல் ஏ தாம்பரம் தொகுதி பார்வையாளர் கே எஸ் ரவிச்சந்திரன் எக்ஸ் எம் எல் ஏ கழக இளம் பேச்சாளர் கா ராஜராஜேஸ்வரி மாநகர மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ காமராஜ் பகுதி கழக செயலாளர் மண்டலக் குழு தலைவருமான டி. காமராஜ் எஸ். சேகர் இரா.சுரேஷ் ஆ.நடராஜ் கி.வேலுமணி எஸ்.ஜி.கருணாகரன் ரமணி அதிமூலம் வி கார்த்திக் ச.இராஜேஷ் இ மனோகர் இரா விஜயகுமார் கோ தேனுபுரி கி முத்துமாறன் வே சிவசுப்பிரமணியன் எஸ் கார்த்தி மு தினேஷ் குமார் மாவட்ட மாநகர பகுதி வட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளுமாறு பகுதி கழகச் செயலாளர் எஸ் இந்திரன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பகுதி கழக செயலாளர் எஸ். இந்திரன் அறிக்கை!

வேளச்சேரியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

துணை முதல்வர் பிறந்தநாள் விழா: நலத்திட்ட உதவிகள்!

மாநிலச் செயலாளர் சுபேர்கான் அறிக்கை!

சென்னை,டிச.6-

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர்; தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) அறிக்கை வருமாறு:

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர்; மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா,

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி இடைவிடாசகாய மாதா ஆலயத்தில் இன்று (06122024) வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மாநிலச் செயலாளர்; தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் துணைச் செயலாளர்கள் அன்வர்கான், ஷபீல் கான், நூருல்லா, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, விஜயகுமார், கா.ரபி அகமது, முனவர்ஜான், ஜோசப் ராஜ், ஷாகுல் அமீது ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்; மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்; முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநகர துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுபோது, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் அனைத்து மாவட்ட, பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை ,கோடம்பாக்கம் மீனாட்சி மகளிர் கல்லூரி நிறுவனர் (பேராசிரியர் கே.ஆர். சுந்தரராசன்) நாள் விழாவில் சென்னைப் பல்கலைக்கழக இக்கால இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் கல்லூரியின் உதவித் தொகையை மாணவி ஒருவருக்கு வழங்கினார். அருகில் இராணி மேரி கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ஆ.அமிர்தகௌரி செல்வராசன், கல்லூரித் தாளாளர், மேனாள் முதல்வர் முனைவர் கே.எசு.இலட்சுமி முனைவர் கவிதா கருப்பையன் உள்ளனர்.